## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
## மேட்டூர் நகராட்சி

**மேட்டூர் நகராட்சியின் அவசரக் கூட்டம் தனி அலுவலர்/ஆணையாளர் அவர்களின் முன்னிலையில் 09.12.2021 ம் தேதி பிற்பகல் 04.00 மணிக்கு நடைபெற்றது.**

**மன்றப் பொருள்**

1. தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மின்னணு சேவை வழங்கல் விதிகள் 2016 (Tamil Nadu Information Technology, Electronic Service Delivery Rules 2016) விதி 5, துணை விதி (1) ன் மூலம் மேட்டூர் நகராட்சியின் கீழே குறிப்பிட்டுள்ள சேவைகள், அட்டவணையில் தெரிவித்துள்ளபடி மின்னணு சேவை விநியோக (Electronic Service Delivery System) அமைப்பின் கீழ் https://tnurbanepay.tn.gov.in/ என்ற இணையதளம் வாயிலாக வழங்கப்படுகிறது. என்ற தகவல் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வரிசை எண் | மின்னணு முறையில் வழங்கக்கூடிய பொது சேவைகளின் பெயர் | | | சேவையை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரி |
|---|---|---|---|---|
| 1 | 2 | | | 3 |
| 1 | குடிநீர் கட்டணம்<br>Water Charge | i | புதிய குடிநீர் இணைப்பு<br>New Water Connection | |
| | | ii | புதிய குடிநீர் இணைப்புக்கான கட்டணம்<br>Payment for New Water Supply Connection | |
| 2 | தடையின்மை சான்றுக்கான விண்ணப்பம்<br>Apply for NOC/ Clearance | i | திரைப்பட படப்பிடிப்புக்கான விண்ணப்பம்<br>Application for movie shooting | |
| | | ii | குடிநீர் இணைப்புக்கான தடையின்மை சான்று (தொழிற்சாலை)<br>NOC for Water Connection (Industrial) | |
| | | iii | திரைப்பட படப்பிடிப்பு கட்டணம்<br>Movie Shooting Payment | |
| | | iv | திரைப்பட படப்பிடிப்புக்கு தடையின்மை சான்று<br>NOC for Movie Shooting | நகராட்சி ஆணையாளர் |
| | | v | தொழிற்சாலை பயன்பாடு பாதாளசாக்கடை இணைப்புக்கான தடையின்மைசான்று<br>NOC for UGD Connection for Industrial | |
| 3 | சுகாதார சான்றிதழ்<br>Sanitary Certificate | i | சுகாதார சான்றிதழ்<br>Sanitation Certificate | |
| 4 | கட்டிட அனுமதி<br>Building Plan | i | கட்டிட அனுமதி பணிக்கான முன்னேற்றம்<br>Building Plan Work Progress | |
| | | ii | கட்டிட அனுமதி இறுதி கட்ட பணிமுன்னேற்ற அறிக்கை<br>Building Plan Work Progress last story | |
| | | iii | வரி மதிப்பீட்டிற்கான நிறைவு அறிக்கை<br>Complete report for Tax Assessment | |
| | | iv | மனைப்பிரிவு அங்கீகாரகட்டணம்<br>Layout Approval Payment | |
| | | v | மனைப்பிரிவு அங்கீகாரம் கோருதல்<br>Layout Approval Request | |
| | | vi | வேலை தொடங்குவதற்கான அறிவிப்பு<br>Notice for Commencement Work | |
| | | vii | கட்டிடம் இடிக்க அனுமதி<br>Permission for Demolition for Building | |
| | | viii | கட்டிட அனுமதிக்கான கட்டிட உரிமகட்டணம்<br>Planning Permission with Building License Payment | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ix | கட்டிட அனுமதிக்கான கட்டிட உரிமம் (12 மீட்டருக்குகீழ்)<br>Planning Permission with Building License (Below12 mts) | |
| | | x | கட்டிட அனுமதிக்கான கட்டிட உரிமம் (1200 சதுர அடிக்குகீழ்)<br>Planning Permission with Building License (Below 1200 Sq.ft) | |
| | | xi | தொழில் வல்லுநர் / டெவலப்பர்களின் பதிவு<br>Registration of Professionals/Developers | |
| | | xii | தொழில் வல்லுநர் / டெவலப்பர்கள் சான்றிதழ் பதிவு<br>Registration of Professional/Developers Certificate | |
| | | xiii | கட்டிட வரைப்படம் புதுப்பித்தல் கோரிக்கை<br>Renewal Building Plan Request | |
| | | xiv | கட்டிட வரைப்படம் புதுப்பித்தல் கட்டணம்<br>Renewal Building Plan Payment | |
| | | xv | தொழில் வல்லுநர் / டெவலப்பரின் புதுப்பித்தல் பதிவு<br>Renewal Registration of Professional/Developer | |
| | | xvi | இயந்திர உரிமத்திற்கான கோரிக்கை<br>Request for machinery License | |
| 5 | வர்த்தக உரிமம்<br>Trade License | i | தொழில் உரிமம்பதிவு – தேடல்<br>Trade Registration – Search | |
| | | ii | தொழில் உரிமம் புதுப்பித்தல் – தேடல்<br>Trade Renewal – Search | |
| 6 | சொத்துவரி<br>Property Tax | i | வரிவிதிப்பு முழுவிவரம்<br>View Assessment History | |
| | | ii | வரிவிதிப்பு விவரம் காண<br>View Assessment | |
| 7 | தொழில்வரி<br>Professional Tax | i | புதிய தொழில்வரி விதிப்புக்கான கோரிக்கை<br>New Assessment request | |
| | | ii | தொழில்வரி விதிப்புக்கான கோரிக்கைமீள சமர்ப்பிப்பு<br>Return Submission | |
| 8 | பிறப்பு மற்றும் இறப்பு<br>Birth & Death | i | எனது சான்றிதழ்<br>My Certificate | |
| 9 | சாலை துண்டிப்பு<br>Road Cutting | i | சாலை துண்டிப்பு அனுமதி<br>Road Cutting Permission | |
| | | ii | சாலை துண்டிப்பு கட்டணம்<br>Road Cutting Payment | |

மேலும் அரசிதழில் வெளியிடவும், அரசு அச்சகத்திற்கு பிரசுரக்கட்டணம் ரூ.7200/– வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்

**(ந.க.எண் : 3231/2021/சி1)**

**தீர்மான எண் 139 நாள் 09.12.2021**
**அனுமதிக்கப்பட்டது**

**2.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.31114/2021/AMRUT-2 நாள்06.12.2021.–ல் 15–வது மத்திய நிதியின் (Tied Grant ) 2021–2022 கீழ் நகராட்சி பகுதிகளில் பொது மக்களின் பயன்பாட்டிற்காக

கீழ்கண்டவாறு ரூ.92.00 இலட்சத்தில் குடிநீர் பணி மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணி/ சுகாதார பணி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**15 வது மத்திய நிதி குழு 2021–2022 (TIED)**

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு இலச்சத்தில் |
|---|---|---|
| | **குடிநீர் பணி** | |
| 1 | மேட்டூர் நகராட்சி சீதாமலையில் உள்ள சுத்திகரிப்பு நீர் சேகரிப்பு 3தொட்டி மேற்கூரை கான்கீரிட் கூரை மேம்படுத்தும் பணி | 40.00 |
| 2 | மேட்டூர் நகராட்சியில் வார்டு எண்.7–ல் பகிர்மான குடிநீர் குழாய் மாற்றுதல் | 6.00 |
| | **மொத்தம்** | **46.00** |
| | **திடக்கழிவு மேலாண்மை பணி/ சுகாதார பணி** | |
| 3 | மேட்டூர் நகராட்சியில் வார்டு எண்.20–ல் உள்ள நேரு நகர் மயானத்தில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி | 30.00 |
| 4 | மேட்டூர் நகராட்சியில் வார்டு எண்.7–ல் உள்ள சேலம் கேம்ப், காமராஜ் நகர் இரண்டாம் குறுக்கு தெரு நுண் உரமைய சாலையை தார் சாலையாக அமைத்தல் | 5.80 |
| 5 | மேட்டூர் நகராட்சியில் கோம்புரான் காடு, சர்கார் தோட்டம் ஆகிய இடங்களில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் II & III-ல் உள்ள கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்ட நீரை விவசாய நோக்கத்திற்காக பயன்படுத்த பைப் லைன் குழாய் அமைத்தல் | 10.20 |
| | **மொத்தம்** | **46.00** |
| | **மொத்தம்** | **92.00** |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 3858/2021/இ1)**

**தீர்மான எண் 140 நாள் 09.12.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**3.** மேட்டூர் நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டடத்தின் கீழ் (KNMT 2021–2022) சிப்பம்–1 (மேட்டூர் நகராட்சி வார்டு எண்.4–ல் தங்கமாபுரிபட்டிணம் மேல்நிலை நீர் தேக்கதொட்டி முன்புற சாலை, தங்கமாபுரிபட்டிணம் மேல்நிலை நீர் தேக்கதொட்டி வடபுற சொசைட்டி ஹவுஸ் சாலை, வார்டு எண்.5–ல் சேலம்கேம்ப் பாரதி நகர் காவல் நிலைய பின்புறம் கிழக்கு முதல் மேற்கு வரை சாலை, வார்டு எண்.10–ல் ஸ்டேட் பேங்க் குடியிருப்பு பின்புறம் காவேரி ஆற்று இணை சாலை, ஜிவா நகர் தெற்குப்பக்க 4–வது பிரதான சாலை, வார்டுஎண்.11–ல் செண்டாபுதூர் பிரதான சாலை, வார்டுஎண். 12–ல் மாதையன்குட்டை எலிக்கரடு தெற்கு புற கால்வாய் மேல்புற சாலை, வார்டு எண்.21–ல் நேதாஜி நகர்–திருமால் நகர் மேல்நிலை தொட்டி தெற்கு புற பிரதானசாலை, திருமால் நகர் மேல்நிலை தொட்டி தெற்கு பிரதானசாலை முதல் குறுக்கு தெரு, வி.பி.கே நகர் கடைசி தெரு– திருமால் நகர் இணைப்பு முதல் குறுக்கு தெரு, வி.பி.கே நகர் கடைசி தெரு– திருமால் நகர் இணைப்பு 2–வது குறுக்கு தெரு, வி.பி.கே நகர் கடைசி தெரு– திருமால் நகர் இணைப்பு 3–வது குறுக்கு தெரு, வி.பி.கே நகர் கடைசி தெரு– திருமால் நகர் இணைப்பு–மேற்குபுற முதல் குறுக்கு சாலை, வி.பி.கே நகர் கடைசி தெரு– திருமால் நகர் இணைப்பு–மேற்குபுற 2–வது குறுக்கு சாலை, வார்டு எண்.28–ல் குமரன் நகர் வடக்குபுற கடைசி பொதுகழிப்பிடம் முதல் குறுக்கு தெரு வார்டு

எண்.29–ல் திருமால் நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி மேற்கு புறசாலை ஆகியவற்றில் மண் சாலைகளை தார் சாலைகளாக மாற்றுதல்) பணிக்கு ரூ.142.85 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 30.11.2021 தேதியன்று கீழ்க்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | திருவாளர்.R.M.andCompany, Kolathur |
| 2 | திரு.A.Moorthy Contractor, Mecheri |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை இந்நகராட்சியின் ஒப்பந்தபுள்ளி கூர்ந்தாய்வு குழுவால் கூர்ந்தாய்வு செய்ததில் இரு ஒப்பந்ததாரர்களும் தகுதியானவர்கள் என அங்கீரிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் விலை விபர பட்டியல் 01.12.2021 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதின் விபரம் பின்வருமாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|
| 1 | திருவாளர்.R.M.andCompany,Kolathur | 4.91% (மதிப்பீட்டை விட அதிகம்) |
| 2 | திரு.A.Moorthy Contractor, Mecheri | 8.41% (மதிப்பீட்டை விட அதிகம்) |

மேலே கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீடு விலை விகிதத்தைவிட 4.91% அதிகமாக திருவாளர்.R.M.andCompany, Kolathur என்பவர் வழங்கியுள்ளார். இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.2212/2021/இ1 நாள்.01.12.2021–ல் விலை குறைப்பு செய்ய ஒப்பந்ததாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டதில், ஒப்பந்ததாரர் தனது 06.12.2021–ம் தேதிய கடிதத்தில் தார் (Bitumen), பெட்ரோல், டீசல் Furnace Oil (உலை எண்ணைய்), கட்டுமான பொருட்களான சிமெண்ட் (Cement) மற்றும் இரும்புக்கம்பி (Steel) ஆகியவற்றின் விலையேற்றம் மற்றும் வேலை ஆட்களை வெளி பகுதிகளிலிருந்து கொணர்ந்து பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளதால் தன்னால் இதற்கு மேல் விலை குறைப்பு செய்து தர இயலாது என்பதை தெரியபடுத்தியுள்ளார். எனவே 4.91% மதிப்பீட்டை விட கூடுதலாக வழங்கியுள்ள திருவாளர்.R.M.andCompany, Kolathur என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை பொறியியல் வழிகாட்டு நூலின் குறிப்புகளின் படி ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2212/2021/இ1)**

**தீர்மான எண் 141 நாள் 09.12.2021**
**அனுமதிக்கப்பட்டது**

**4.** மேட்டூர் நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டடத்தின் கீழ் (KNMT 2021–2022) சிப்பம்–2 (மேட்டூர் நகராட்சி வார்டு எண்.4 தங்கமாபுரிபட்டிணம் பெரியார் நகர் 4வது குறுக்கு சாலை, வார்டு எண்.21–ல் திருமால் நகர் மேல்நிலை தொட்டி தெற்குபுறம்–வடக்குபுற 3வது

குறுக்கு சாலை, திருமால் நகர் மேல் நிலை நீர்தேக்க தொட்டி– தெற்குபுறம்–இடதுபக்கம் முதல் குறுக்கு தெரு , திருமால் நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி– தெற்குபுறம்– இடதுபக்கம் 2வது குறுக்கு தெரு, திருமால் நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி தெற்குபுறம் 4வது குறுக்கு தெரு மேற்கு பக்க சாலை, திருமால் நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி தெற்குபுறம் 4வது குறுக்கு தெரு, முதல் வீதி, திருமால் நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி தெற்குபுறம் 4வது குறுக்கு தெரு 2வது வீதி, வார்டு எண் .29–ல் பொன்னகர் மேற்குபுரம் முதல் குறுக்கு தெரு முதல் சாலை ஆகியவற்றில் மண் சாலைகளை பேவர் பிளாக் சாலைகளாக மாற்றுதல்) பணிக்கு ரூ.60.20 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 30.11.2021 தேதியன்று கீழ்க்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | திருவாளர்.ஆர்.ஆர் கனிஷ்கா & கோ |
| 2 | திருவாளர்.கே.ஆர்.எம். காண்ட்ரக்டர் |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை இந்நகராட்சியின் ஒப்பந்தபுள்ளி கூர்ந்தாய்வு குழுவால் கூர்ந்தாய்வு செய்ததில் இரு ஒப்பந்ததாரர்களும் தகுதியானவர்கள் என அங்கீரிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் விலை விபர பட்டியல் 01.12.2021 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதின் விபரம் பின்வருமாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|
| 1 | திருவாளர்.ஆர்.ஆர் கனிஷ்கா & கோ | 4.92% (மதிப்பீட்டை விட அதிகம்) |
| 2 | திருவாளர்.கே.ஆர்.எம். காண்ட்ரக்டர் | 6.02% (மதிப்பீட்டை விட அதிகம்) |

மேலே கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீடு விலை விகிதத்தைவிட 4.92% அதிகமாக திருவாளர்.ஆர்.ஆர் கனிஷ்கா & கோ அவர்கள் வழங்கியுள்ளார். இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.2212/2021/இ1 நாள்.01.12.2021–ல் விலை குறைப்பு செய்ய ஒப்பந்ததாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டதில், ஒப்பந்ததாரர் தனது 06.12.2021–ம் தேதிய கடிதத்தில் தார் (Bitumen), பெட்ரோல், டீசல் Furnace Oil (உலை எண்ணைய்), கட்டுமான பொருட்களான சிமெண்ட் (Cement) மற்றும் இரும்புக்கம்பி (Steel) ஆகியவற்றின் விலையேற்றம் மற்றும் வேலை ஆட்களை வெளி பகுதிகளிலிருந்து கொணர்ந்து பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளதால் தன்னால் இதற்கு மேல் விலை குறைப்பு செய்து தர இயலாது என்பதை தெரியபடுத்தியுள்ளார். எனவே 4.92% மதிப்பீட்டை விட கூடுதலாக வழங்கியுள்ள திருவாளர்.எம்.ஆர்.பி.கன்ஷ்ட்ரக்சன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை பொறியியல் வழிகாட்டு நூலின் குறிப்புகளின் படி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2212/2021/இ1)**

**தீர்மான எண் 142 நாள் 09.12.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**5.** மேட்டூர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ( TURIP 2021-2022) **சிப்பம் –1** மேட்டூர் நகராட்சியில் வார்டு எண்.**02** வைத்தீஸ்வரா பள்ளி வடக்கு புற சாலை, வார்டு எண்.**07** சேலம்கேம்ப் காமராஜ் நகர் காளியம்மன் கோவில் சாலை, வார்டு எண்.**08** அம்பேத்கார் நகர் பொதுகழிப்பிட தெற்கு புற சாலை ஆகியவற்றில் தார் தளம் மேம்படுத்துதல், வார்டு எண்.**04** தங்காமாபுரிபட்டிணம் பெரியார் நகர் முதல் குறுக்கு தெரு , பெரியார் நகர் இரண்டாவது குறுக்கு தெரு, பெரியார் நகர் முன்றாவது குறுக்கு தெரு ஆகியவற்றில் பேவர் பிளாக் அமைத்தல் பணிக்கு ரூ.**99.00** இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் **03.12.2021** தேதியன்று கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | **திரு.கே.எ.குமார், கான்ட்ரக்டர்** |
| 2 | **திருவாளர், செல்வம் & கோ.** |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் தொழில்நுட்ப தகுதியான ஆய்வு செய்ததில் இரு ஒப்பந்ததாரர்களும் தகுதியானவர்கள் என நகராட்சி ஒப்பந்த கூர்ந்தாய்வர்கள் மூலம் அங்கீரிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் விலை விபர பட்டியல் **07.12.2021** அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதின் விபரம் பின்வருமாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|
| 1 | **திரு.கே.எ.குமார், கான்ட்ரக்டர்** | **4.96**% (மதிப்பீட்டை விட அதிகம்) |
| 2 | **திருவாளர், செல்வம் & கோ.** | **8.96**%(மதிப்பீட்டை விட அதிகம்) |

மேலே கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீடு விலை விகிதத்தைவிட **4.96**% அதிகமாக **திரு.கே.எ.குமார், கான்ட்ரக்டர்** அவர்கள் வழங்கியுள்ளார். இவ்வலுவலக கடிதம் ந.க.எண். **2556–1/2021/இ1** நாள்.**07.12.2021–ல்** விலை குறைப்பு செய்ய ஒப்பந்ததாரருக்கு கடிதம் வழங்கப்பட்டதில், ஒப்பந்ததாரர் தனது **09.12.2021–ம்** தேதிய கடிதத்தில் தார் (Bitumen), பெட்ரோல், டீசல் Furnace Oil (உலை எண்ணெய்), கட்டுமான பொருட்களான சிமெண்ட் (Cement) மற்றும் இரும்புக்கம்பி (Steel) ஆகியவற்றின் விலையேற்றம் மற்றும் வேலை ஆட்களை வெளி பகுதிகளிலிருந்து கொணர்ந்து பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளதால் தன்னால் இதற்கு மேல் விலை குறைப்பு செய்து தர இயலாது என்பதை தெரியபடுத்தியுள்ளார். மேலும் உள்ளூர் விலைவிகிதத்தின் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு, மேற்படி விலை விகிதம் உள்ளூர் மார்க்கெட் விலை விகிதத்தினை அனுசரித்துள்ளதால் **திரு.கே.எ.குமார், கான்ட்ரக்டர்** அவர்கள் கூடுதலாக **4.96%** வழங்கிய ஒப்பந்தப்புள்ளியை பொறியியல் வழிகாட்டு நூலின் குறிப்புகளின் படி ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

எனவே **4.96**% மதிப்பீட்டைவிட கூடுதலாக வழங்கியுள்ள **திரு.கே.எ.குமார், கான்ட்ரக்டர்** அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2556–1/2021/இ1)**

**தீர்மான எண் 143 நாள் 09.12.2021**
**அனுமதிக்கப்பட்டது**

**6.** மேட்டூர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ( TURIP 2021–2022) **சிப்பம் –** 2 மேட்டூர் நகராட்சியில் வார்டு எண்.10 மாதையன்குட்டை எம்.ஜி.ஆர் நகர் முதல் குறுக்குதெரு, வார்டு எண்.12 மாதையன்குட்டை எலிக்கரடு தெற்குபுற பிரதான சாலை,வார்டு எண்.13 சக்தி நகர் தெற்கு புற ஐந்தாவது தெரு, வார்டு எண்.14 மின் வாரிய பயணியர் மாளிகை வடக்கு புற சாலை ஆகியவற்றை தார் தளம் மேம்படுத்துதல் பணிக்கு ரூ.99.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 03.12.2021 தேதியன்று கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | **திரு. ஆர்.ஆறுமுகம் ஒப்பந்ததாரர்** |
| 2 | **திருவாளர் கே.எஸ்.பி& கோ.** |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் தொழில்நுட்ப தகுதியான ஆய்வு செய்ததில் இரு ஒப்பந்ததாரர்களும் தகுதியானவர்கள் என நகராட்சி ஒப்பந்த கூர்ந்தாய்வர்கள் மூலம் அங்கீரிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் விலை விபர பட்டியல் 07.12.2021 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதின் விபரம் பின்வருமாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|
| 1 | **திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர்** | 4.91% (மதிப்பீட்டை விட அதிகம்) |
| 2 | **திருவாளர் கே.எஸ்.பி& கோ.** | 10.77%(மதிப்பீட்டை விட அதிகம்) |

மேலே கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீடு விலை விகிதத்தைவிட 4.91% அதிகமாக திரு. ஆர்.ஆறுமுகம் கான்ட்ரக்டர் அவர்கள் வழங்கியுள்ளார். இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 2556–2/2021/இ1 நாள்.07.12.2021–ல் விலை குறைப்பு செய்ய ஒப்பந்ததாரருக்கு கடிதம் வழங்கப்பட்டதில், ஒப்பந்ததாரர் தனது 09.12.2021–ம் தேதிய கடிதத்தில் தார் (Bitumen), பெட்ரோல், டீசல் Furnace Oil (உலை எண்ணெய்), கட்டுமான பொருட்களான சிமெண்ட் (Cement) மற்றும் இரும்புக்கம்பி (Steel) ஆகியவற்றின் விலையேற்றம் மற்றும் வேலை ஆட்களை வெளி பகுதிகளிலிருந்து கொணர்ந்து பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளதால் தன்னால் இதற்கு மேல் விலை குறைப்பு செய்து தர இயலாது என்பதை தெரியபடுத்தியுள்ளார். மேலும் உள்ளூர் விலைவிகிதத்தின் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு, மேற்படி விலை விகிதம் உள்ளூர் மார்க்கெட் விலை விகிதத்தினை அனுசரித்துள்ளதால் **திரு.ஆர்.ஆறுமுகம்,**

**ஒப்பந்ததாரர்** அவர்கள் கூடுதலாக **4.91%** வழங்கிய ஒப்பந்தப்புள்ளியை பொறியியல் வழிகாட்டு நூலின் குறிப்புகளின் படி ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

எனவே 4.91% மதிப்பீட்டைவிட கூடுதலாக வழங்கியுள்ள **திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர்** அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2556–2/2021/இ1)**

**தீர்மான எண் 144 நாள் 09.12.2021**
**அனுமதிக்கப்பட்டது**

**7.** மேட்டூர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ( TURIP 2021-2022) **சிப்பம் –3** மேட்டூர் நகராட்சியில் வார்டு எண்.17 சுப்புரமணியார் கோவில் மேற்கு புற முதல் குறுக்கு தெரு , வார்டு எண்.17 காளியம்மன் கோவில் முன் பக்க வடதுபுற சாலை, வார்டு எண்.20 சௌரியம்மாள் நகர் பிரதான சாலை, வார்டு எண்.20 .நேரு நகர் மயானம் வடக்கு புறசாலை, வார்டு எண்.21 பாரதி நகர் தெற்கு புற பிரதான சாலை, வார்டுஎண்.22–ல் மசூதி முன்புறசாலை ஆகியவற்றை தார் தளம் மேம்படுத்துதல் பணிக்கு ரூ.108.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 03.12.2021 தேதியன்று கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | **திரு. எ. மூர்த்தி, கான்ட்ரக்டர்** |
| 2 | **திருவாளர் : ஆர்.எம் & கம்பெனி.** |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் தொழில்நுட்ப தகுதியான ஆய்வு செய்ததில் இரு ஒப்பந்ததாரர்களும் தகுதியானவர்கள் என நகராட்சி ஒப்பந்த கூர்ந்தாய்வர்கள் மூலம் அங்கீரிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் விலை விபர பட்டியல் 07.12.2021 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதின் விபரம் பின்வருமாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|
| 1 | **திரு. எ. மூர்த்தி, கான்ட்ரக்டர்** | 4.94% (மதிப்பீட்டை விட அதிகம்) |
| 2 | **திருவாளர் : ஆர்.எம் & கம்பெனி.** | 6.48%(மதிப்பீட்டை விட அதிகம்) |

மேலே கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீடு விலை விகிதத்தைவிட 4.94% அதிகமாக **திரு. எ. மூர்த்தி, கான்ட்ரக்டர்** அவர்கள் வழங்கியுள்ளார். இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 2556–3/2021/இ1 நாள்.07.12.2021–ல் விலை குறைப்பு செய்ய ஒப்பந்ததாரருக்கு கடிதம் வழங்கப்பட்டதில், ஒப்பந்ததாரர் தனது 09.12.2021–ம் தேதிய கடிதத்தில் தார் (Bitumen), பெட்ரோல், டீசல் Furnace

Oil (உலை எண்ணெய்), கட்டுமான பொருட்களான சிமெண்ட் (Cement) மற்றும் இரும்புக்கம்பி (Steel) ஆகியவற்றின் விலையேற்றம் மற்றும் வேலை ஆட்களை வெளி பகுதிகளிலிருந்து கொணர்ந்து பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளதால் தன்னால் இதற்கு மேல் விலை குறைப்பு செய்து தர இயலாது என்பதை தெரியபடுத்தியுள்ளார். மேலும் உள்ளூர் விலைவிகிதத்தின் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு, மேற்படி விலை விகிதம் உள்ளூர் மார்க்கெட் விலை விகிதத்தினை அனுசரித்துள்ளதால் **திரு. எ. மூர்த்தி, கான்ட்ரக்டர்** அவர்கள் கூடுதலாக **4.94%** வழங்கிய ஒப்பந்தப்புள்ளியை பொறியியல் வழிகாட்டு நூலின் குறிப்புகளின் படி ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

எனவே 4.94% மதிப்பீட்டைவிட கூடுதலாக வழங்கியுள்ள **திரு. எ. மூர்த்தி, கான்ட்ரக்டர்** அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2556–3/2021/இ1)**

**தீர்மான எண் 145 நாள் 09.12.2021**
**அனுமதிக்கப்பட்டது**

**8.** மேட்டூர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் (TURIP 2021-2022) **சிப்பம் –4** மேட்டூர் நகராட்சியில் வார்டு எண்.20–ல் பாரதி நகர் பிரதான சாலை, வார்டு எண்.25–ல் ஆடுவதைகூட அணுகு சாலை ஆகியவற்றை தார் தளம் மேம்படுத்துதல் பணிக்கு ரூ.93.60 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 03.12.2021 தேதியன்று கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | **திருவாளர் : ஆர்.எம் & கம்பெனி** |
| 2 | **திரு. எ. மூர்த்தி, ஒப்பந்ததாரர்** |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் தொழில்நுட்ப தகுதியான ஆய்வு செய்ததில் இரு ஒப்பந்ததாரர்களும் தகுதியானவர்கள் என நகராட்சி ஒப்பந்த கூர்ந்தாய்வர்கள் மூலம் அங்கீரிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் விலை விபர பட்டியல் 06.12.2021 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதின் விபரம் பின்வருமாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|
| 1 | **திருவாளர் : ஆர்.எம் & கம்பெனி** | 4.91% (மதிப்பீட்டை விட அதிகம்) |
| 2 | **திரு. எ. மூர்த்தி, கான்ட்ரக்டர்** | 8.41%(மதிப்பீட்டை விட அதிகம்) |

மேலே கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீடு விலை விகிதத்தைவிட 4.91% அதிகமாக **திருவாளர் : ஆர்.எம் &**

**கம்பெனி** அவர்கள் வழங்கியுள்ளார். இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 2556–4/2021/இ1 நாள்.07.12.2021–ல் விலை குறைப்பு செய்ய ஒப்பந்ததாரருக்கு கடிதம் வழங்கப்பட்டதில், ஒப்பந்ததாரர் தனது 09.12.2021–ம் தேதிய கடிதத்தில் தார் (Bitumen), பெட்ரோல், டீசல் Furnace Oil (உலை எண்ணெய்), கட்டுமான பொருட்களான சிமெண்ட் (Cement) மற்றும் இரும்புக்கம்பி (Steel) ஆகியவற்றின் விலையேற்றம் மற்றும் வேலை ஆட்களை வெளி பகுதிகளிலிருந்து கொணர்ந்து பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளதால் தன்னால் இதற்கு மேல் விலை குறைப்பு செய்து தர இயலாது என்பதை தெரியபடுத்தியுள்ளார். மேலும் உள்ளூர் விலைவிகிதத்தின் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு, மேற்படி விலை விகிதம் உள்ளூர் மார்க்கெட் விலை விகிதத்தினை அனுசரித்துள்ளதால் **திருவாளர் : ஆர்.எம் & கம்பெனி** அவர்கள் கூடுதலாக **4.91%** வழங்கிய ஒப்பந்தப்புள்ளியை பொறியியல் வழிகாட்டு நூலின் குறிப்புகளின் படி ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

எனவே 4.91% மதிப்பீட்டைவிட கூடுதலாக வழங்கியுள்ள **திருவாளர் : ஆர்.எம் & கம்பெனி** அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2556–4/2021/இ1)**

**தீர்மான எண் 146 நாள் 09.12.2021**
**அனுமதிக்கப்பட்டது**

**9.** மேட்டூர் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ( TURIP 2021-2022) **சிப்பம் –5** மேட்டூர் நகராட்சியில் வார்டு எண்.21–ல் பாரதி நகர் மற்றும் பொன்னகர் இணைப்பு சாலை வார்டு எண்.28–ல் சித்தாகாடு கிழக்குபுற முதல் குறுக்கு தெரு, வார்டு எண்.30–ல் குள்ளவிரன்ப்பட்டி பிள்ளையார் கோவில் முதல் கொளத்தூர் மெயின்ரோடு வரை தார் தளம் மேம்படுத்துதல் பணிக்கு ரூ.100.30 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 03.12.2021 தேதியன்று கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | **திரு.வி.நவனிதகிருஷ்ணன், ஒப்பந்ததாரர்** |
| 2 | **திரு. கே.எழிலரசன், ஒப்பந்ததாரர்** |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் தொழில்நுட்ப தகுதியான ஆய்வு செய்ததில் இரு ஒப்பந்ததாரர்களும் தகுதியானவர்கள் என நகராட்சி ஒப்பந்த கூர்ந்தாய்வர்கள் மூலம்

அங்கீரிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் விலை விபர பட்டியல் 07.12.2021 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதின் விபரம் பின்வருமாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|
| 1 | **திரு.வி.நவனிதகிருஷ்ணன், ஒப்பந்ததாரர்** | 4.93% (மதிப்பீட்டை விட அதிகம்) |
| 2 | **திரு. கே.எழிலரசன், ஒப்பந்ததாரர்** | 5. 84%(மதிப்பீட்டை விட அதிகம்) |

மேலே கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீடு விலை விகிதத்தைவிட 4.86% அதிகமாக **திரு.வி.நவனிதகிருஷ்ணன், ஒப்பந்ததாரர்** அவர்கள் வழங்கியுள்ளார். இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 2556–5/2021/இ1 நாள்.07.12.2021 –ல் விலை குறைப்பு செய்ய ஒப்பந்ததாரருக்கு கடிதம் வழங்கப்பட்டதில், ஒப்பந்ததாரர் தனது –ம் தேதிய கடிதத்தில் தார் (Bitumen), பெட்ரோல், டீசல் Furnace Oil (உலை எண்ணெய்), கட்டுமான பொருட்களான சிமெண்ட் (Cement) மற்றும் இரும்புக்கம்பி (Steel) ஆகியவற்றின் விலையேற்றம் மற்றும் வேலை ஆட்களை வெளி பகுதிகளிலிருந்து கொணர்ந்து பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளதால் தன்னால் இதற்கு மேல் விலை குறைப்பு செய்து தர இயலாது என்பதை தெரியபடுத்தியுள்ளார். மேலும் உள்ளூர் விலைவிகிதத்தின் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு, மேற்படி விலை விகிதம் உள்ளூர் மார்க்கெட் விலை விகிதத்தினை அனுசரித்துள்ளதால் **திரு.வி.நவனிதகிருஷ்ணன், ஒப்பந்ததாரர்** அவர்கள் கூடுதலாக **4.86%** வழங்கிய ஒப்பந்தப்புள்ளியை பொறியியல் வழிகாட்டு நூலின் குறிப்புகளின் படி ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

எனவே 4.86% மதிப்பீட்டைவிட கூடுதலாக வழங்கியுள்ள **திரு.வி.நவனிதகிருஷ்ணன்** அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2556–5/2021/இ1)**

**தீர்மான எண் 147 நாள் 09.12.2021**
**அனுமதிக்கப்பட்டது**

**10.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 01.09.2021–ம் தேதிய காணொலி காட்சி ஆய்வு கூட்டத்தில், நகராட்சி பகுதிகளில் உள்ள சாலைகளை முறையாக அளவீடு செய்து Road Register-ஐ UTIS மென்பொருளில் பதிவேற்றம் செய்ய தெரிவிக்கப்பட்டதன் பேரில் மேட்டூர் நகராட்சி பகுதியிலுள்ள சாலைகளை அளவீடு செய்ய மூன்று குழுக்களாக பிரிந்து அளவீடு செய்யப்பட்டு auto cad–ல் வார்டு வாரியாக மற்றும் நகர சாலை வரைபடம் தயார் செய்து சமர்ப்பிக்கப்பட்டது. மேற்கண்ட பணிகள் தயார் செய்யப்பட்டதற்கு ரூ.37,000/– செலவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் திருமதி.செ.பிரேமா உதவி பொறியாளர் தனது 02.12.2021 –ம் தேதிய

விண்ணப்பத்தில் மேற்படி தொகை ரூ.37000/— என்னால் செய்யப்பட்டுள்ளதை வழங்குமாறு கோரியுள்ளார். எனவே செலவு செய்த தொகை ரூ.37000/—ஐ திருமதி.செ.பிரேமா உதவி பொறியாளர் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.3298/2021/இ1)**

**தீர்மான எண் 148 நாள் 09.12.2021**
**அனுமதிக்கப்பட்டது**

**11.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 01.09.2021—ம் தேதிய காணொலி காட்சி ஆய்வு கூட்டத்தில், நகராட்சி பகுதியில் உள்ள வீட்டு உபயோக குடிநீர் இணைப்புகள், பாதாள சாக்கடை வீட்டு உபயோக இணைப்புகள், மேல் நிலை நீர் தேக்க தொட்டிகள், பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்கள் குறித்த விரிவான அறிக்கை தயார் செய்து Jal Jeevan Mission Amrut 2.0 தலைப்பில் உரிய வரைபடங்களுடன் சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டதன் பேரில் மேட்டூர் நகராட்சி பகுதியிலுள்ள வீட்டு உபயோக குடிநீர் இணைப்புகள், பாதாள சாக்கடை வீட்டு உபயோக இணைப்புகள், மேல் நிலை நீர் தேக்க தொட்டிகள், பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்கள் குறித்த விரிவான அறிக்கை auto cad—ல் வரைபடம் தயார்செய்து சமர்ப்பிக்கப்பட்டது. மேற்கண்ட பணிகள் தயார் செய்யப்பட்டதற்கு ரூ.63,000/— செலவு செய்யப்பட்டுள்ளது. என்றும் மேலும் திருமதி.செ.பிரேமா உதவி பொறியாளர் தனது 02.12.2021 —ம் தேதிய விண்ணப்பத்தில் மேற்படி தொகை ரூ.63000/— என்னால் செய்யப்பட்டுள்ளதை வழங்குமாறு கோரியுள்ளார். எனவே செலவு செய்த தொகை ரூ.63,000/—ஐ திருமதி.செ.பிரேமா உதவி பொறியாளர் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.3299/2021/இ1)**

**தீர்மான எண் 149 நாள் 09.12.2021**
**அனுமதிக்கப்பட்டது**

**12.** மேட்டூர் நகராட்சி பொறியியல் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் சீத்தாமலை ஆற்று நீரேற்று நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளள்ள 60HP மின் மோட்டரின் காயில் பழுதடைந்துவிட்டது என்றும், அதனால் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது என்றும், அதனை சரிசெய்து தர கோரி 06.12.2021—ம் தேதிய இந்நகராட்சி பொறியாளர், உதவி பொறியாளர் மற்றும் மின் பணியாளர் ஆகியோர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர். மேலும் பொது மக்களுக்கு தினசரி குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியதின் அவசியம் கருதி பழுதடைந்த மேற்படி 60HP மின் மோட்டரின் காயில் புதியதாக மாற்றம் செய்யவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.80,000/—ற்குள் பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3300/2021/இ1)**

**தீர்மான எண் 150 நாள் 09.12.2021**
**அனுமதிக்கப்பட்டது**

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**
**மேட்டூர் நகராட்சி**

**மேட்டூர் நகராட்சியின் அவசரக் கூட்டம் தனி அலுவலர்/ஆணையாளர் அவர்களின் முன்னிலையில் 17.12.2021 ம் தேதி பிற்பகல் 04.00 மணிக்கு நடைபெற்றது.**
**மன்றப் பொருள்**

**1.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.32454/2021/AMRUT- 2 நாள்.17.12.2021–ல் 15வது நிதிக்குழு திட்டத்தில் தேசிய சுகாதார திட்டம் 2021–2022–ன் கீழ் மேட்டூர் நகராட்சியில் நகர்புற சுகாதார நல மையம் கட்டுவதற்கு ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவே வார்டு எண்.10 மாதையன் குட்டை பகுதியில் நகர் நல மையம் அமைக்கும் பணி மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3278/2021/இ1)**

**தீர்மான எண் 151 நாள் 17.12.2021**
**அனுமதிக்கப்பட்டது**

**2.** மேட்டூர் நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ( KNMT 2021-2022) வார்டு எண்.14–ல் பியர்சல் கார்டன் பகுதியில் பூங்கா அமைத்தல் பணிக்கு ரூ.46.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 07.12.2021 தேதியன்று கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | **திரு.கிருத்திகா கன்ஸ்ட்ரக்சன்** |
| 2 | **திரு. ஆர்.ஆர்.கனிஸ்கா & கோ** |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் தொழில்நுட்ப தகுதியான ஆய்வு செய்ததில் இரு ஒப்பந்ததாரர்களும் தகுதியானவர்கள் என நகராட்சி ஒப்பந்த கூர்ந்தாய்வு குழு மூலம் அங்கீரிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் விலை விபர பட்டியல் 08.12.2021 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதின் விபரம் பின்வருமாறு

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|
| 1 | **திரு.கிருத்திகா கன்ஸ்ட்ரக்சன்** | 4.89% (மதிப்பீட்டை விட அதிகம்) |
| 2 | **திரு. ஆர்.ஆர்.கனிஸ்கா & கோ** | 8. 01%(மதிப்பீட்டை விட அதிகம்) |

மேலே கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீடு விலை விகிதத்தைவிட 4.89% அதிகமாக **திரு.கிருத்திகா கன்ஸ்ட்ரக்சன்**அவர்கள் வழங்கியுள்ளார். இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 1486/2021/இ1

நாள்.08.12.2021 –ல் விலை குறைப்பு செய்ய ஒப்பந்ததாரருக்கு கடிதம் வழங்கப்பட்டதில், ஒப்பந்ததாரர் தனது 10.12.2021 –ம் தேதிய கடிதத்தில் பெட்ரோல், டீசல் கட்டுமான பொருட்களான சிமெண்ட் (Cement) மற்றும் இரும்புக்கம்பி (Steel) ஆகியவற்றின் விலையேற்றம் மற்றும் வேலை ஆட்களின் கூலி உயர்வு காரணமாக தன்னால் இதற்கு மேல் விலை குறைப்பு செய்து தர இயலாது என்பதை தெரிவித்துள்ளார். மேலும் உள்ளூர் விலைவிகிதத்தின் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு, மேற்படி விலை விகிதம் உள்ளூர் மார்க்கெட் விலை விகிதத்தினை அனுசரித்துள்ளதால் **திரு.கிருத்திகா கன்ஸ்ட்ரக்சன்**அவர்கள் கூடுதலாக **4.89%** வழங்கிய ஒப்பந்தப்புள்ளியை பொறியியல் வழிகாட்டு நூலின் குறிப்புகளின் படி ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

எனவே 4.89% மதிப்பீட்டைவிட கூடுதலாக வழங்கியுள்ள **திரு.கிருத்திகா கன்ஸ்ட்ரக்சன்**அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1486/2021/இ1)**

**தீர்மான எண் 152 நாள் 17.12.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**3.** மேட்டூர் நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி திட்ட பராமரிப்பு (Water Supply improvement Scheme) பணிகள் மேற்கொள்ள திருவாளர் K.P.S Engineering Construction, மேட்டூர் அவர்களுடன் இவ்வலுவலக செயல்முறை கடித ந.க.எண்.4495/16/இ1 நாள்.18.12.2020–ம் தேதி ஒப்பந்தம் செய்யப்பட்டு 01.01.2021–ம் தேதி முதல் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் தனியார் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் ஒப்பந்ததாரர் கடந்த 16.05.2021 –ம் தேதி M/s. K. P.S Engineers Construction உரிமையாளர் திரு.எஸ்.தியாகராஜன், இறந்துவிட்டதாகவும் அவர் மேற்கொண்ட குடிநீர் அபிவிருத்தி திட்ட பராமரிப்பு பணிகளை அரசு விதிகளுக்குட்பட்டு நல்லமுறையில் பணியாளர்களை கொண்டு குடிநீர் அபிவிருத்தி திட்ட பராமரிப்பு பணிகளை செய்து தருவதாக 23.06.2021–ம் தேதிய கடிதத்தில் அவரது மனைவி திருமதி.சுதா வழங்கியுள்ளார் .மேற்படி பணி மேற்கொள்ள திரு. எஸ்.தியாகராஜனின் வாரிசுதாரராகிய அவரது தயார் மோகனசுந்தரி, மகள் ரித்திகா, மகன் ஸ்ரீ ஆதவன் ஆகியோர் எழுத்து பூர்வமாக ஆட்சேபனை பத்திரம் வழங்கியுள்ளார்கள். மேலும் கோயமுத்தூர், தலைமை பொறியாளர் , தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயல்முறை கடிதம் ந.க.எ.ண 2071/F, Outlived –periyakodivery HWSDO(T3) /CE/CBF/2019/Dt. 16.07.2021 M/S. KPS Engineers Construction(எஸ்.தியாகராஜன்), மேற்கொண்டு வந்த பணிகளை அவரது மனைவி திருமதி.எஸ்.சுதா அவர்களுக்கு பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கியுள்ளார். எனவே, ஒப்பந்ததாரர் திருவாளர்.எஸ்.தியாகராஜன், M/s.KPS Engineering Constructions, Mettur, அவர்கள் மேற்கொண்டு வந்த பணியானது குடிநீர் விநியோக (வெளிகொணர்வு) அத்தியாவசிய பணியாக இருப்பதாலும், இயக்கம் மற்றும் பராமரிப்பு பணியாக இருப்பதாலும் உடனடியாக ஒப்பந்தபுள்ளி பெற்று பணியிளை மேற்கொள்ள இயலாத நிலையில் இருப்பதால், குடிநீர் விநியோக பணியின் அத்தியாவசியம் மற்றும் அவசர

அவசியம் கருதி திருமதி S.சுதா மூலம் குடிநீர் அபிவிருத்தி திட்ட பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) குடிநீர் விநியோக பராமரிப்பு பணியின் அவசர அவசியம் கருதியும் பொது மக்களுக்கு குடிநீர் வழங்க வேண்டி அவசியம் கருதியும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி M/s.KPS Engineering Constructions, உரிமையாளரான திரு.எஸ்.தியாகராஜன், அவர்களின் மனைவியும் மற்றும் வாரிசுதாரான திருமதி.சுதா மூலம் குடிநீர் அபிவிருத்தி திட்ட பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்

**(கோப்பு எண் .4495/2016/இ1)**

**தீர்மான எண் 153 நாள் 17.12.2021**
**அலுவலகக் குறிப்பினை ஏற்று அங்கீகரிக்கப்பட்டது.**

<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>
<u>மேட்டூர் நகராட்சி</u>

**மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் தனி அலுவலர்/ஆணையாளர் அவர்களின் முன்னிலையில் 30.12.2021 ம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்றது.**
**<u>மன்றப் பொருள்</u>**

**1.** நகராட்சி ஆணையாளரின் டிசம்பர்–2021 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண். 154 நாள். 30.12.2021**

**பதிவு செய்யப்பட்டது**

**2.** நகராட்சி பொறியாளரின் டிசம்பர்–2021 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண். 155 நாள். 30.12.2021**

**பதிவு செய்யப்பட்டது**

**3.** அரசானை எண். 98 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (என் எஸ்) துறை நாள்.09.11.2021 –ல் நமக்கு நாமே திட்டம் 2021 –2022 –ன் கீழ் நகர மேம்பாட்டு மற்றும் உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள பொது மக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தொழிற்சாலைகள், நகரின் முன்னனி நிறுவனங்கள், குடியிருப்போர் நல சங்கம் போன்றவற்களின் பங்கு தொகை பெற்று பணிகள் மேற்கொள்ள தெரிவித்துள்ளதன்படி வ.எண்.1 மற்றும் 2 ஆகிய பணிகளுக்கு 3–ல் 1 பங்கு தொகை ரூ.20.00 இலட்சம் மட்டும் வழங்க நிர்வாக மேலாளர், கெம்பிளாஸ்ட் சன்மார் லிமிடெட், மேட்டூர் சம்மதம் தெரிவித்துள்ளனர். மேலும் வ.எண்.3–ல் உள்ள பணிக்கு தலைவர், மேட்டூர் அமைதி அறக்கட்டளை நிறுவனத்திடமிருந்து மதிப்பீட்டுத்தொகை ரூ.30.00 லட்சத்தில் (50%) 1/2 பங்கு ரூ.15.00 இலட்சம் வழங்க சம்மதம் தெரிவித்துள்ளார் எனவே கீழ்கண்ட பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு பெறும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ரூ.இலட்சத்தில்)

| வ. எண் | பணிகள் விபரம் | மதிப்பீட்டு தொகை | அரசு நிதி | பங்களிப்பு | பங்களிப்பு தாரர் விபரம் |
|---|---|---|---|---|---|
| 1 | மேட்டூர் நகராட்சி வார்டு எண்.03 தங்கமாபுரிபட்டிணம் வாரச்சந்தை மேம்படுத்துதல் | 56.40 | 37.60 | 18.80 | நிர்வாக மேலாளர், கெம்பிளாஸ்ட் சன்மார் லிமிடெட், மேட்டூர் |
| 2 | மேட்டூர் நகராட்சி தங்கமாபுரிபட்டிணம் ஆர்.எஸ். பிரிவு சாலையில் 12 மீட்டர் உயர மின்விளக்கு கோபுரம் அமைத்தல் | 3.60 | 2.40 | 1.20 | |
| 3 | மேட்டூர் நகராட்சி வார்டு எண்.10 | 30.00 | 15.00 | 15.00 | தலைவர், |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | எரியூட்டும் தகனமேடையில் மேம்பாடு செய்தல் | | | | மேட்டூர் அமைதி அறக்கட்டளை |
| **மொத்தம்** | | **90.00** | **55.00** | **35.00** | |

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2750/ 2021/ இ1)**
**தீர்மான எண். 156 நாள். 30.12.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**4.** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணி புரிந்து வரும் துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், ஓட்டுநர்கள், நகர சுகாதார செவிலியர், மகப்பேறு ஆயா, தூய்மை பணியாளர்கள், பொறியாளர் பிரிவில் பணி புரிந்து வரும் ஓட்டுநர், சாலை பணியாளர்கள், குடிநீர் பணியாளர்கள், தெரு விளக்கு பணியாளர்கள், கழிவுநீர் பண்ணையில் பணி புரிந்து வரும் பண்ணை பணியாளர்கள், நகரமைப்பு பிரிவில் பணி புரிந்து வரும் சங்கிலியாளர் மற்றும் பொதுப் பிரிவில் பணி புரிந்து வரும் அலுவலக உதவியாளர்கள், காவலர்கள் ஆகியோருக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் (2டி) என் 37 நாள் 14.05.1999 ன் படி, பொறியாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளரின் 17.12.2021ந் தேதிய அறிக்கைகளில் தெரிவித்துள்ள அளவுகளின் படி 2021—2022ம் ஆண்டிற்குரிய சீருடைகளை வாங்கவும் மேற்படி சீருடைகளை அரசு சார்பு நிறுவனமாகிய திருப்பூர் கோ—ஆப்டெக்ஸ் நியூ ஷோரூமில் வாங்கவும், மேற்காண் பணியாளர்களுக்கு தையல் கூலி வழங்கவும் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.3091/2021/எச்1)**
**தீர்மான எண். 157 நாள். 30.12.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**5.** இந்நகராட்சிக்குச் சொந்தமான மேட்டூர் கேம்ப் பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள கட்டணக் கழிப்பறை மற்றும் குளியல் அறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 முடிய உள்ள காலத்திற்கு 07.12.2021 ல் மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பொது ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்க்கண்டுள்ளவாறு ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள ஒரு ஒப்பந்தப்புள்ளியில் திரு..K.குருசாமி என்பவர் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.7,61,000/- கோரியுள்ளார். கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை ( பிரதி மாத வாடகை ) |
|---|---|---|
| 1. | திரு.K.குருசாமி<br>த/பெ.காவேரி கவுண்டர்,<br>75, அம்மன் நகர்,<br>மேட்டூர் அணை. | ரூ.7,61,000/- |

## அலுவலகக் குறிப்பு

மேற்படி ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.K.குருசாமி, அம்மன் நகர், மேட்டூர் அணை என்பவர் ஆண்டு ஒன்றுக்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகையாக ரூ.7,61,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். இவ்வினத்திற்கு சென்ற ஆண்டு உரிமத்தொகை ரூ.11,62,035/- ஆகும். மூன்றாண்டு சராசரித் தொகை ரூ..11,07,578/- ஆகும். மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கோரிய தொகையானது சென்ற ஆண்டை விட ரூ.4,01,035/- குறைவாகவும், மூன்றாண்டு சராசரியை விட ரூ.3,46,578/- குறைவாகவும் உள்ளது. இவ்வினத்திற்கு இதுவரை **24.02.2021, 06.10.2021** மற்றும் **07.12.2021** ஆகிய நாட்களில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மேற்படி **24.02.2021** மற்றும் **06.10.2021** ஆகிய நாட்களில் நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியை தினசரி நாளிதழ்களில் விளம்பரமும் செய்யப்பட்டுள்ளது. இவ்வினத்திற்கு கடந்த **06.10.2021** ஆம் தேதி நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில், மேற்படி நபர் திரு. K.குருசாமி, மேட்டூர் அணை மட்டுமே கலந்து கொண்டு ஆண்டு ஒன்றுக்கு ரூ.7,52,500/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியிருந்தார். இவரை தவிர இவ்வினத்திற்கு வேறு எவரும் ஏலமோ / ஒப்பந்தப்புள்ளியோ கோரவில்லை. மேற்படி ஒரே ஒப்பந்தப்புள்ளியாக இருந்ததால், மறு ஏலம் கொண்டு வர இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.**111**, நாள்.**28.10.2021**ல் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி **07.12.2021** ஆம் தேதியில் மீண்டும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி தேதியிலும் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றுள்ளது. மேற்காணும் நபரை தவிர வேறு எவரும் கலந்து கொள்ளவில்லை. இவ்வினத்தை துறை மூலம் வசூலிக்கும் போது, பணியாளர்களின் ஊதியம், மின் கட்டணம் மற்றும் டிக்கெட் புத்தகம் அடிக்க ஆகும் செலவினங்கள் போக நகராட்சிக்கு வரும் உத்தேச வருவாய் ரூ.4,33,000/-ஆக உள்ளது. துறை மூலம் வசூலிக்கும் போது வரும் வருவாய் மற்றும் தற்போது கோரப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகை ஆகிய இரண்டையும் ஒப்பிடும் போது, ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள தொகையானது ரூ.3,28,000/- கூடுதலாக உள்ளது. இந்த பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியிலும் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றிருந்தாலும், தொடர்ந்து மூன்று முறை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும், தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டும், இவ்வினத்திற்கு மேற்படி நபரை தவிர வேறு எவரும் ஏலமோ / ஒப்பந்தப்புள்ளியோ கோராததால், நகராட்சிக்கு ஏற்படும் நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டு மன்றம் இந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**(ந.க.எண்.3636/2021/அ2)**
**தீர்மான எண். 158 நாள். 30.12.2021**

**அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது**

**6.** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம், ந.க.எண்.25897/2021/P1, நாள்.22.12.2021–ன்படி தூய்மை இந்தியா திட்டம் 2.0 திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில்,

1. Social Inclusion
2. Zero Dump
3. Plastic Waste Management
4. Transparency

ஆகிய நான்கு தலைப்புகளில் புதிய கண்டுபிடிப்புகளை அரசுக்கு சமர்பிக்க பொதுமக்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களை தேர்வு செய்ய கீழ்க்கண்ட விபரப்படி Swachh Technology Committee அமைத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பெயர் | பதவி | பெறுப்பு |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை | ஆணையாளர் மேட்டூர் நகராட்சி | Chair Person (Municipal Commissioner) |
| 2 | திரு.ஆர்.பரக்கத்துல்லா | துப்புரவு ஆய்வாளர், மேட்டூர் நகராட்சி, | Convener Notal officer SBM – U |
| 3 | திரு.டி.சிவபிரகாசம் | தலைவர் ரோட்டரி சங்கம் மேட்டூர் நகரம் | Internal Member |
| 4 | திரு.கே.சந்திரமோகன் | உறுப்பினர் அமைதி அறக்கட்டளை | External Member (Technical Backround) |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2599/2021/எச்1)

**தீர்மான எண். 159 நாள். 30.12.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**7.** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் ந.க.எண்.4161/2021/பி1 நாள்.23.12.2021 –ம் தேதிய கடிதத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்கள் சேலம் மாவட்டத்தில் அரசு நலதிட்ட உதவிகள் வழங்கும் விழா 11.12.2021–ம் தேதி நடைபெற்றதாகவும் மேற்படி விழாவில் சேலம் மாவட்ட நகராட்சிகள் சார்பாக வளர்ச்சி மற்றும் திட்ட பணிகள் செய்தி (இந்து தமிழ் நாளிதழ்) சேலம் மாவட்ட பிரதியில் வெளியிடப்பட்டதாகவும் அதற்கான தொகையினை இடைப்பாடி நகராட்சி ஆணையாளர் முழுமையாக ரூ.13,104/– வழங்கியதால் ஆத்தூர் , மேட்டூர் , நரசிங்கபுரம், இடைப்பாடி ஆகிய நகராட்சிகள் மேற்படி தொகையை பிரித்து வழங்குமாறும் அதன்படி இந்நகராட்சிக்கு ரூ.3276/– என நிர்ணயம் செய்த தொகையினை இடைப்பாடி நகராட்சிக்கு வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சி பங்கு தொகையான ரூ.3276/–ஐ இடைப்படி நகராட்சி ஆணையருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.3355/2021/இ1)**

**தீர்மான எண். 160 நாள். 30.12.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**8.** மேட்டூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்ட பராமரிப்பு பணிகளை (Water Supply Improvement Scheme) மேற்கொண்டு வந்த M/s.K.P.S. Engineering Construction, Mettur அவர்களின் உரிமைதாரர் திரு. தியாகராஜன் என்பவர் கடந்த 10.05.2021 –ல் இறந்துவிட்டதால்

அவரது மனைவியும் வாரிசுதாரரான திருமதி.சுதா அவர்கள் மூலம் தற்பொழுது குடிநீர் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது தற்பொழுது நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடித ந.க.எண். 21787/2021/ EA2 நாள்.02.10.2021–ல் புதிய வழிகாட்டுதளின்படி இந்நகராட்சி வெளிக்கொணர்வு முறையில் குடிநீர் விநியோக பணிகளுக்கு திட்ட பிரேனை தயார் செய்து இவ்வலுவலக கடித ந.க.எ.ண.2400/2021/ இ2 நாள்.03.12.2021 –ல் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே குடிநீர் விநியோக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு அனுமதி கிடைக்கும் வரை பணியின் அவசர அவசியம் கருதி குடிநீர் விநியோக இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொண்டு வரும் திரு. தியாகராஜன் அவரது மனைவியும் வாரிசுதாரரான திருமதி.சுதா அவர்கள் மூலம் பராமரிப்பு பணிகளை 6 மாத காலம் (ஜனவரி 2022 முதல் ஜீன் 2022 வரை) ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதியும் குடிநீர் பராமரிப்பு பணிகளை தொடர்ந்து செய்ய வேண்டியுள்ளதால் 01.01.2022 முதல் ஆறு மாத காலத்திற்கு திருமதி.சுதா என்பவரின் ஒப்பந்த காலத்தினை நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4495/2016/இ1)**

**தீர்மான எண். 161 நாள். 30.12.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**9.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20452/2020/LA3 நாள்.10.11.2020.–ல் 15–வது மத்திய நிதியின் (Tied Grant ) 2020–2021–ன் கீழ் நகராட்சி பகுதிகளில் கீழ்கண்டவாறு ரூ.75.00 இலட்சத்தில் குடிநீர் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டதன்பேரில் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**15CFC Work-Tied Grant -2020-2021**

| வ.எண் | பணிகள் விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| | **திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள்** | |
| 1 | மேட்டூர் நகராட்சி வார்டு எண்.20 ல் உள்ள நேருநகர் சமுதாயகழிப்பிடம் பராமரித்தல் பணி | 3.50 |
| 2 | மேட்டூர் நகராட்சியில் வார்டு எண்.26–ல் உள்ள பிள்ளையார் கோவில் தெரு சமுதாயகழிப்பிடம் பராமரித்தல் பணி | 3.00 |
| 3 | மேட்டூர் நகராட்சியில் குப்பைகள் தரம் பிரித்து வாங்கும் பணிக்கு 80 லிட்டர் கொள்ளவு உள்ள குப்பைத் தொட்டி 132 எண்ணிக்கை புதியதாக கொள்முதல் செய்யும் பணி | 1.80 |
| 4 | மேட்டூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக தேவையான உபகரணங்கள் வாங்கும் பணி (Organic Shredding Machine Heavy, Powdering Double Stage | 10.60 |

| | | |
|---|---|---|
| | Pulverizer , Incinerator Duck) | |
| 5 | மேட்டூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு 6 எண்ணம் புதியதாக கூடுதல் BOV வாகனம் வாங்குதல் | 12.60 |
| 6 | மேட்டூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு BOV வாகனத்திற்கு (10 எண்ணம்) பேட்டரி (Lithium Battery) வாங்குதல் | 6.00 |
| | **மொத்தம்** | **37.50** |
| | **குடிநீர் பணிகள்** | |
| 1 | மேட்டூர் நகராட்சியில் வார்டு எண்.30-ல் குள்ளவீரன்பட்டி நீருந்து நிலையத்திற்கு புதிய 50 HP மின் மோட்டார் அமைக்கும் பணி | 8.20 |
| 2 | மேட்டூர் நகராட்சியில் சீத்தாமலையில் உள்ள பழைய சுத்திகரிப்பு நிலையத்தில் 60 HP ஸ்டாட்டர் (Soft Starter) அமைக்கும் பணி | 3.85 |
| 3 | மேட்டூர் நகராட்சியில் பழைய நீரேற்று நிலையத்தில் புதிய 60 HP ஸ்டாட்டர் (Soft Starter) அமைத்தல் | 3.85 |
| 4 | மேட்டூர் நகராட்சியில் பழுதடைந்த வால்வு மாற்றுதல் மற்றும் வால்வு தொட்டி அமைத்தல் | 17.10 |
| 5 | மேட்டூர் நகராட்சியில் தெருவிளக்குகள் பராமரிக்கும் டைமர்கள் , 7/20 சர்வீஸ் ஒயர்கள் மற்றும் தெருவிளக்குகள், உயர்மின் கோபுர விளக்குகளுக்கான புதிய தரைமட்ட கேபில்கள் அமைத்தல் | 4.50 |
| | **மொத்தம்** | **37.50** |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.3858/2020/இ1)**

**தீர்மான எண். 162 நாள். 30.12.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**10.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20452/2020/LA3 நாள்.10.11.2020.-ல் 15-வது மத்திய நிதியின் (Tied and Untied Grant) 2020-2021-ன் கீழ் நகராட்சி பகுதிகளில் கீழ்கண்டவாறு ரூ.150.00 இலட்சத்தில் குடிநீர் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டதன்பேரில் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**15CFC Work-Tied Grant -2020-2021**

| **வ.எண்** | **பணிகள் விபரம்** | **மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்)** |
|---|---|---|

| | | |
|---|---|---|
| சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் | | |
| 1 | மேட்டூர் நகராட்சி பகுதியிலுள்ள வார்டு எண்.02, ஆர். எஸ். மெயின் ரோடு, வார்டு எண்.07, காமராஜ் நகர், வார்டு எண்.08, சாஸ்திரி நகர், வார்டு எண்.12 எலிக்கரடு , வார்டு எண்.21, நேதாஜி நகர் வார்டு எண்.30, வ.உ.சி நகர் ஆகிய பகுதிகளிலுள்ள சமுதாய கழிப்பிடங்கள் பழுது மற்றும் பராமரித்தல் பணி | 9.80 |
| 2 | மேட்டூர் நகராட்சி வார்டு எண்.15 ல் உள்ள தூக்கணாம்பட்டி சமுதாய கழிப்பிடம் பழுது மற்றும் பராமரித்தல் பணி | 3.00 |
| 3 | மேட்டூர் நகராட்சியில் பிட்டர் மேன் குடியிருப்பு மற்றும் கூலி லைன் பகுதியில் பாதாள சாக்கடை திட்டத்தின் தொட்டி அமைக்கும் பணி | 14.80 |
| 4 | மேட்டூர் நகராட்சி தூக்கணாம்பட்டி பகுதியில் உள்ள எடை மேடை பழுது மற்றும் புணரமைக்கு பணி | 4.50 |
| | **மொத்தம்** | **32.10** |
| | **குடிநீர் பணிகள்** | |
| 5 | மேட்டூர் நகராட்சியில் நேரு நகர் கீழ்குள்ளவீரன்பட்டி மற்றும் இந்திரா நகர் ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோக குழாய் (150 mm Dia DI) அமைக்கும்பணி | 15.80 |
| 6 | மேட்டூர் நகராட்சி சீத்தாமலை நீரேற்று நிலையத்தில் உள்ள கிளாரிபையர் (Clarifier) பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் | 17.00 |
| 7 | மேட்டூர் நகராட்சி வார்டு எண்.12 எலிக்கரடு மேல் மற்றும் கீழ் பகுதியில் பிரதான குடிநீர் விநியோக குழாய் 100 mm Dia DI குழாய் அமைக்கும்பணி | 10.10 |
| | **மொத்தம்** | **42.90** |
| | **ஆக மொத்தம்** | **75.00** |
| **15CFC Work-UnTied Grant -2020-2021** | | |

| பணிகள் விபரம் | பணிகள் விபரம் | பணிகள் விபரம் |
|---|---|---|
| 1 | மேட்டூர் நகராட்சி வார்டு எண்.20 சம்மன்ஸ் கோட்டை பின்புறம், மின்சார வாரிய குடியிருப்பு மற்றும் குறுக்கு தெரு ஆகிய பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணி | 42.00 |
| 2 | மேட்டூர் நகராட்சி வார்டு எண்.10 எரிவாயு தகன மேடை இணைக்கும் தெற்கு புற பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 16.20 |
| 3 | மேட்டூர் நகராட்சி வார்டு எண்.29 கீழ்குள்ளவீரன்பட்டி மூன்றாவது குறுக்கு பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 17.50 |
| | **மொத்தம்** | **75.70** |

மேற்கண்ட பணிகளுக்கு ஆகும் செலவினம் ரூ.150.70 இலட்சத்தில் 15–வது மத்திய நிதியின் (Tied and Untied Grant) 2020–2021–ன் கீழ் பெறப்படும் தொகை ரூ.150.00 இலட்சம் தவிர கூடுதலாக ஆகும் ரூ.70,000/–யினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.3858/2020/இ1)**

**தீர்மான எண். 163 நாள். 30.12.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**11.** மேட்டூர் நகராட்சியில் காலியாக உள்ள தட்டச்சு பணியிடத்தில் நிரந்தர பணியாளரை பூர்த்தி செய்யும் வரை மாவட்ட ஆட்சித்தலைவர் சேலம் அவர்களின் மாவட்ட அரசிதழ் எண்.11–ல் 2020–2021ஆம் ஆண்டிற்கு தட்டச்சு பணிக்கு நாள் ஒன்றிற்கு ரூ.611/– விலை விகிதப் பட்டியல் வரப்பெற்றது. மேற்படி விலைவிகிதப்பட்டியல் அடிப்படையாகக் கொண்டு 2021–2022 ஆம் ஆண்டுக்கு விலைப்புள்ளி கோரப்பட்டது.. மேற்படி கோரப்பட்ட விலைப்புள்ளியில் நாள் ஒன்றுக்கு குறைந்தபட்ச விலைப்புள்ளியாக ரூ.610/– என வழங்கிய எம்.சசிகலா, கணினி மையம், மேட்டூர் அணை என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று மேட்டூர் நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.185 நாள்.30.12.2020–ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. தற்போது உள்ளாட்சி தேர்தல் விரைவில் நடைபெற உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி சென்ற ஆண்டு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய எம்.சசிகலா, கணினி மையத்தின் விலை விகிதம் பட்டியலின்படி எம்.சசிகலா, மேட்டூர்

என்பவருக்கு 30.12.2021 முதல் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி சென்ற ஆண்டு பெறப்பட்ட அதே விலைப்புள்ளியின்படி 30.12.2021 முதல் ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்யவும் அதற்கான செலவினங்களுக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4563/2012/ சி1)**

**தீர்மான எண். 164 நாள். 30.12.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**12.** இந்நகராட்சிக்குட்பட்ட திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு தேவையான பிளிச்சிங் பவுடர் மற்றும் சுண்ணாம்பு தூள் சப்ளை செய்தல் (Without GST) பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.108 நாள்.28.10.2021–ன் படி ரூ.2,00,000/–மதிப்பீட்டில் விலைபுள்ளி கோரியதில் 27.12.2021 ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | ஆ/எ.செயலாளர், டி.டி.165, பென்னாகரம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் வண்ணாத்திப்பட்டி, மாங்கரை, தருமபுரி. | ரூ.1,63,500/– |
| 2 | ஆ/எ.செயலாளர், ஊரக விரிவாக்க பயிற்சி நிலைய கூட்டுறவு பண்டகசாலை, கே.கே.251, கிருஷ்ணகிரி அணை, கிருஷ்ணகிரி. | ரூ.1,95,000/– |

***அலுவலக குறிப்பு:***

வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலையை விட குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள ஆ/எ.செயலாளர், டி.டி.165, பென்னாகரம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் வண்ணாத்திப்பட்டி, மாங்கரை, தருமபுரி. விலைப்புள்ளிதாரரது விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2640/2021 /H1)**

**தீர்மான எண். 165 நாள். 30.12.2021**

**அனுமதிக்கப்பட்டது**

**12.** மேட்டூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் முன்கள பணியாளர்களை பாதுகாக்கும் பொருட்டு மேட்டூர் நகராட்சி பகுதியில் கொரோன மூன்றாவது அலை தற்போது சேலம் மாவட்டத்தில் வெகு விரைவாக பரவுவதால் அதனை கட்டுப்படுத்தும் வகையில் முன்கள பணியாளர்களுக்கு மூன்று மாதங்களுக்கு தேவையான பாதுகாப்பு

உபகரணங்கள் தேவைப்படுவதால் கீழ்கண்டுள்ள பொருட்கள் வாங்க ஆகும் உத்தேச செலவு ரூ.3.50 இலட்சம் (ரூபாய் மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) செலவினத்தை நகராட்சி வருாவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தேவையான பாதுகாப்பு உபகரணங்கள்**

| S.No | Particulars | Nos |
|---|---|---|
| 1) | Surgical Mask 3 Ply | 15000 Nos |
| 2) | Face Mask K.N.95 | 500 Nos |
| 3) | Hand Sanitizer (100 ml) | 1000 Nos |
| 4) | PPE KIT (Coat, Cotton, Cap) | 100 Nos |
| 5) | Hand Gloves (Both Cotton & Rubber( | 330 Nos |
| 6) | Single use Rubber Gloves (Latex Gloves) | 1000 Nos |
| 7) | Face Shield | 100 Nos |
| 8) | Disposable Polythenr Hand Gloves (Pair) | 100 Nos |
| 9) | LD PPE Bag for Packing | 100 Nos |
| 10) | D Cut Bags | 100 Nos |
| 11) | Colour Coded Bin Yellow (70 Litres) | 60 Nos |
| 12) | Carton Box for Packing (520X400X470 mm) | 60 Nos |
| 13) | Colour Coded Bag-Yellow (>50 Micron) (Preferably through common Bio Medical Waste Treatment Operator) | 60 Nos |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி கோவிட்–19 தடுப்பு பணிக்காக தூய்மை பணியாளர்களுக்கு வழுங்குவதற்கு ஆகும் செலவு ரூ.3.50 லட்சத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்ற அனுமதி அளிக்கலாம்.

**(ந.க.எண். 2640–I/2021 /H1)**

**தீர்மான எண். 166 நாள். 30.12.2021**

**அனுமதிக்கப்பட்டது**